**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 80. சமர்த்த ராம்தாஸ் மஹராஜ்**

ராமாயண காவியத்தை கலியுகத்தில் மக்களுக்கு மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்ல வந்த அன்பர்கள் பற்பலர்.இக்கால வாலி வரை அக்காவியத்தின் படைப்பு மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுக் கொண்டே இருப்பதைக் காண்கிறோம்.

காரணம்: அன்றாட வாழ்க்கையில் மனிதன் சந்திக்கும் அனைத்து வகை ப்ரச்சனைகளுக்கும் ராமாயணம் பதில் கூறும்.

அவ்வழியில் மிகவும் எளிய வடிவில் மனித வாழ்வின் கோட்பாடுகளை மீண்டும் மக்களுக்கு உணர்த்த வந்த மஹான்களில் ஒருவரே சமர்த்த ராம்தாஸ் மஹராஜ்.இவரது ஆன்மீக ஞானமும் விவேகமும் மிகவும் உன்னதம் ஆனவை.அதை அடிப்படையாகக் கொண்டே இவரை ஹனுமானின் அம்சம் என பாரத தேசம் கொண்டாடும்.

ஊர்: கங்கைக் கரை ஜோன்பூர்

பெற்றோர்: சூர்யாஜி பண்டிட் - ராணு பாய்

**<u>பிறப்பின் பின்னணி:</u>**
இவரது அப்பா மிகச் சிறந்த சூர்ய உபாசகர்.சூரியனை உபாசித்து அத்துடன் ராமாயணப் பாராயணமும் செய்தவர்.அதன் பலனாய் இரண்டு மகன்களை ஈன்றார்.முதல் மகன் - கங்காதர் சூரியனின் விழிப்புணர்வையும் இரண்டாம் மகன் - ராம்தாஸ் ஹனுமானின் விழிப்புணர்வையும் கொண்ட மானுடத் தன்மையை உடையவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## எது திருட்டு?
முதல் மகனின் கல்யாணத்தை அடுத்து ராம்தாஸுக்கும் குடும்பப் பொறுப்பை ஒப்படைக்க முடிவு செய்த போது, பொருள் தேட முற்பட அவர் தாய் அறிவுரை கூறினார்.அப்போது வேலை தேடிச் சென்ற ராம்தாஸ், ஒரு விவசாயி நெல் மூட்டைகளை வண்டியில் ஏற்ற முடியாமல் தவிப்பதைக் கண்டு ஒரு பெரிய மூட்டையை ஏற்றி விட்டு, மற்றொரு மூட்டையை வீட்டுக்கும் கொண்டு வருகிறார்.விவசாயி அவரைத் திட்டியபடியே வருகிறார்.

*"எது அம்மா! திருட்டு? இறைவனின் பொருளான ஜீவாத்மாவை நமது என்று*

***உடல் மூலம் மறைத்துக் கொண்டு சுமக்கிறோமே இதுவல்லோ திருட்டு? ஒரு மூட்டை நெல்லுக்கு இப்படிப் புலம்பும் நாம், இறைவன் தன் சொத்தை நாம் வைத்துக் கொண்டு இருப்பதைப் பார்த்தும் அமைதியும் பொறுமையும் காப்பதைப் பற்றி எண்ணினோமா?”*** என்று பிறவியின் உட்கருத்தை முதன்முதலில் விவசாயிக்கும் அம்மாவுக்கும் வெளியிட்டார்.

**கல்யாணத்தைத் துறந்த ஹனுமான் பக்தன்**

சில காலத்தில் இவருக்கு மணம் பேசி முடித்தனர்.கல்யாணத்துக்குச் சற்று நேரத்துக்கு முன் தன்னுள் இருக்கும் தெய்வீக சக்தி தன் வாழ்வின் குறிக்கோள் எது என்பதை உணர்த்தியதும், யாருக்கும் தெரியாமல் கல்யாண வீட்டை விட்டு ஊருக்கு வெளியே உள்ள வனத்துக்குச் சென்று விட்டார்.

**ஹனுமானை தரிசிக்கிறார் ராம்தாஸ்**

காட்டுள் சென்று ஆழ்நிலை த்யானத்தில் மனதைச் செலுத்தி சதா ஸ்ரீராம மந்த்ரத்தை உச்சரித்துக் கொண்டு வரும் சமயம் தன் விழிப்புணர்வில் ஹனுமனின் தரிசனம் கிடைக்கப் பெறுகிறார்.அவர் மூலம் ஸ்ரீராமனை தரிசிக்க வேண்டும் என்ற மெய்யுணர்வு நிலைக்குத் தன்னை உயர்த்துக் கொள்ள முற்பட்டார்.

**பஞ்சவடியில் கண்ட ராமன்**

இவர் ஊருக்கு அருகில் தான் ராமன் தங்கிய பஞ்சவடி. ஸ்ரீராம நவமியில் அக்கோயிலில் மஹா கோலாகலமாக உத்சவம் நிகழும்.அப்போது ஹனுமான் அவரது உள்ளுணர்வாய் இருந்து அவரை அங்கே செல்லத் தூண்டினார்.ஹோமச் சடங்கின் முடிவில் பூர்ணாகுதி அளிக்கும் போது ஸ்ரீராமனை தரிசிக்கும் பாக்யம் உண்டு என்றார் ஹனுமான்.

அவ்வேளை வந்ததும் ஒரு ஆட்டுக்கடா எப்படியோ ஹோம சாலைக்குள் வந்து பூர்ணாகுதிய முகர வர, அனைவரும் அதை அடிக்க, அதனுள் மிளிரும் ப்ரஹ்ம சத்யத்தை ஸ்ரீராமன் என உணர்ந்து அக்கடாவை பத்திரமாகக் காப்பாற்றி அதை நமஸ்கரித்தார் ராம்தாஸ்.இதன் மூலம் அந்தர்யாமித்வத்தை அவர் ஏற்றுக் கொண்ட பக்குவம் வெளிப்படுகிறது.

”**குரங்கையும் கழுகையும் அணிலையும் ஏற்றுய்க் கொண்ட ராமபத்ரன் ஏன் கடாவுக்குள் சத்யமாக இருக்கக் கூடாது?**” என்பாராம் ராம்தாஸ் அடிக்கடி தன் சொற்பொழிவுகளில்.

**குருவும் சிஷ்யனும்**

அதன் பின் ராம்தாஸ் சாங்க்லீ நகரில் ஆஸ்ரமம் அமைத்துக் கொண்டு வாழ்கிறார்.அவரது குருவான ஹனுமான் அவருடனே ஒரு முதியவர் வடிவில் வாழ்ந்தார் என்றால் ராம்தாஸின் ஆழ்ந்த பக்தியும் தூய மனதும் புரிகிறதா?

புதிய இசை வடிவில் ஹனுமான் இலக்கணம் வகுக்க, புதிய ஆன்மீகச் செய்திகள் கொண்ட பற்பல பஜனைப் பாடல்களை ராம்தாஸ் வரகவியாகப் பாடினார்.இசைக்கலையின் வல்லுனரனா ஹனுமான் உடன் இருந்து வழிசெய்யும் இசை வழிபாடு அவ்வூரிலும் அதன் பகுதிகளிலும் மிகவும் ப்ரசித்தம்!

**ஹனுமான் கோயில்**

அவ்வூரில் வாழ்ந்த உத்தவர் என்பர் ராம்தாஸின் முதல் சீடர்.அவருக்கு அழகிய ஹனுமன் கோயிலைக் கட்டிக் கொடுத்து அதில் முறையே பூஜிக்கும் பொறுப்பை அளித்துவிட்டு ஸ்தல யாத்ரை மேற்கொள்கிறார் ராம்தாஸ்.மீண்டும் கோதவரிக்கரையில் ஆழ்நிலை த்யனாத்தில் ஹனுமனை தரிசித்தார்.

முக்கிய ஆன்மீகப் பணிகள்:

* சத்ரபதி சிவாஜி மஹாராஜா இவரது பெருமைகளை உணர்ந்தி உவரை ஆன்மீக வழிகாட்டியாக ஏற்றுக் கொள்கிறார்.

* சிவாஜியின் பற்றற்ற தன்மையை உணர்ந்து ஒரு முறை ஔரங்கசிப்பின் படை தாக்க வந்த போது தன் ராம மந்த்ர வலிமையால் தேசத்தைக் காத்துக் கொடுத்தார் ராம்தாஸ்.

* சதாரவில் தத்தாத்ரேய் என்ற நாவிதனுக்கு ஸ்ரீராம மந்த்ரோபதேசம் செய்தார்.அவனுக்கு ராமனின் தரிசனம் பல முறைக் கிட்டியதாம்.

* தேசத்தில் நிலவும் சாதிக் கொடுமைக்கு எதிர்த்து ஆன்மீகப் போர் தொடுத்தார் ராம்தாஸ்.

* பண்டரீபுரத்தில் மூலஸ்தானத்தில் அனைவருக்கும் மூல விக்ரஹம் ஸ்ரீராமனாகக் காட்சி கொடுக்க வைத்தார் ராம்தாஸ்.

* கல்யாண கோஸ்வாமி என்ற தன் சீடனுக்கு ஆழ்நிலை சமாதி அடையும் பேற்றினை நல்கினார் ராம்தாஸ்.

* வேணுபாய் என்ற விதவை மாணவி இவரிடம் தீக்ஷை பெற்று இவருக்கு சேவை

செய்ய முற்பட, அவளைக் குறித்து அவதூறுப் பேச்சுக்களை ஊராரும் அவள் கணவன் வீட்டாரும் எழுப்பிட, ஸ்ரீராம தாரக மந்த்ரத்தின் தீவிர ஜெபத்தால் அவரது பாதங்களில் உயிரை விட்டாள்.

* வீர சிவாஜி மிகவும் களைத்துப் போய் வேட்டையாடும் போது ஒரு காட்டில் தவித்த காலத்தில் இவர் தன் தெய்வீக சூக்ஷ்ம தரிசனம் தந்து நீர் ஊற்றை ஏற்படுத்தினாராம்.

* பூனே மாநகரில் உள்ள முக்கிய அனுமான் கோயில்களை இவர் எழுப்பினார். [சோனி மாருதி, பிகாரி மாருதி, சோர் மாருதி ஆலயங்கள்]

* சனாதன தர்மத்தின் மிக உயர்ந்த அத்வைத்த கோட்பாட்டை இவர் உணர்ந்து அனைத்து மதங்களை மதித்தார்.

* ஞான தேவ் மற்றும் ஏக் நாத்தின் சமாதிகளைச் செப்பனிட்டு மக்களை வழிபட வைத்தார்.

* இவரது ப்ரதான மாணவர் உத்தவரை ஔரங்காபாத் ராஜா மத வெறியால் சித்ரவதை செய்ய, அதை உணர்ந்த இவர் தன் ஜெப வலிமையால் ஹனுமானை ஏவி அரசனை மிகவும் கேவலமாகக் கண்டித்தாராம்.மத வெறியுடன் செயல்படுவதில்லை என்று அவன் சத்தியம் செய்தான்.

* சஜ்ஜன்கட் ஊரில் இவரும் துகாராம் மஹராஜும் ஒருங்கே சிவாஜியின் முன்னிலையில் பஜனைகள் செய்தனர்.அவ்வூரில் உள்ள அம்பிகை மீது அபங்கங்கள் பாடினர்.

* சௌதாகர் என்ற வ்யாபாரி இவரது சிஷ்யர். அவரது கப்பல் மூழ்க இருந்ததை இவர் காப்பாற்றி, அவனிடம் இருந்து அதற்கு உரிய பொருள் பெற்று பூனாவில் மாருதி கோயிலை எழுப்பினார்.

* இவர் சஜ்ஜன்கட்டில் மஹாசமாதி அடைந்தார். ராம த்ரயோதசாக்ஷ்ரீ என்ற மந்த்ரத்தையே இவர் அனைவருக்கும் உபதேசித்தார்.இம்மந்த்ரத்தை தினமும் இவரை எண்ணி மாருதியை வணங்கி ஜெபித்துக் கணக்கில் எழுதிக் கொண்டு வர, குறிப்பிட்ட எண்ணிக்கை தாண்டினால் ஸ்ரீராமன் ப்ரத்யக்ஷமாக தரிசனம் தருவதாக இவர் சத்யம் தருகிறார்.
ஹரி ஓம்!